| Published Date: | 3 Dec 2018 | Publication: | Makkal Kural (Tamil) |
|---|---|---|---|
| Edition: | Coimbatore | Page No: | 9 |
| MAV/CCM: | 28505/57.01 | Circulation: | 35000 |

# தேசிய வினாடிவினா போட்டி: கோத்தகிரி செயிண்ட் ஜூட்ஸ் பள்ளி மாணவர்கள் வெற்றி

கோவை, நவ. 30 –

தேசிய அளவிலான தகவல் தொழில்நுட்ப போட்டியில், கோத்தகிரியை சேர்ந்த யாழினி சண்முகம் மற்றும் ஹர்ஷ் அகர்வால் ஆகியோர் இரண்டாமிடம் பிடித்தனர்.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம், பள்ளிகளுக்கிடையேயான மாபெரும் தகவல் தொழில்நுட்ப வினாடி– வினா போட்டியில் தேசிய அளவில் வெற்றி பெற்றவர்கள் குறித்த தகவல்களை வெளியிட்டு உள்ளது.

மும்பை விவாந்தா தாஜ் ஓட்டலில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் கோத்தகிரியின் செயிண்ட் ஜூட்ஸ் பள்ளியைச் சேர்ந்த யாழினி சண்முகம் மற்றும் ஹர்ஷ் அகர்வால் ஆகியோர் இரண்டாம் இடத்தை வென்றதோடு, 1,00,000 மதிப்புள்ள டிஜிட்டல் ஷாப்பிங்குக்கான வவுச்சர்கள், வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் பள்ளிக்கான கேடயம் ஆகியவற்றை பரிசாகப் பெற்றனர்.அதேநேரம் வதோராவைச் சேர்ந்த செயிண்ட் கபீர் பள்ளியின் பாவ்யா ரானிங்க மற்றும் நிஹார் ஷா ஆகியோர் போட்டியின் சேம்பியன்ஷிப் பட்டத்தை வென்றனர். இறுதிப்போட்டியில் கலந்து கொண்ட டிசிஎஸின் தலைமை செயல் அதிகாரி ராஜேஷ் கோபிநாதன் பேசுகையில் ''இந்திய மாணவர்கள், புதிய நவீன தொழில்நுட்பங்களைப் புரிந்து கொண்டு அவற்றை பின்பற்றி வருவதைப் பார்க்கும் போது




உற்சாகமாக இருக்கிறது.

இதுதான் தகவல் தொழில்நுட்பத்தின் எதிர்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் பாதை.

கடந்த பல ஆண்டுகளில் இந்தியாவை முன்னுக்கு கொண்டு வந்ததில் முக்கிய பங்கினை தகவல் தொழில்நுட்பம் பெற்று உள்ளது. இது மேலும், தொடர்ந்து இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உதவியாக அமையும் என்றார்.

வினாடிவினா போட்டியானது, 'ரியல் டைம் ஸ்கோரிங்' என்ற முறையில் நடைபெற்றதால் மிகவும் பரபரப்பாகவும், சுவாரஸ்யமாகவும் இருந்தது. 'பிக்ப்ரெய்ன்' என்று அழைக்கப்படும் கிரி பாலசுப்பிரமணியம், டிசிஎஸ் ஐடி விஸ் வினாடி வினாப் போட்டியின் க்விஸ் மாஸ்டராக செயல்பட்டார்.